## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 280/2017 | Date : 27.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: தங்கப்பன் (எ) முனியப்பன் | த/பெ.முனிய கவுண்டர் | |
| Evidence Recorded Time: 1.16 P.M. to 02.10 P.M | | |

**4 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தில் எனக்கு பாகம் கேட்டு போட்டுள்ளேன். தாவா சொத்து சூரப்பள்ளி கிராமத்தில் உள்ள சர்வே எண்.230/B3 யில் 2 ஏக்கர் 4 செண்ட் நிலத்தில் பாகம் கேட்டுள்ளேன். எனது தகப்பனார் முனியப்ப கவுண்டரின் முதல் மனைவி பெயர் மாரியம்மாள் என்றால் சரிதான். வாதிகளாகிய நாங்களும், பாக்கியம் என்ற மகளும் வாரிசுகள் என்றால் சரிதான். அதன் பிறகு முனியப்ப கவுண்டர் இரண்டாவதாக சின்னதாயி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். சின்னதாயி மூலமாக 5 முதல் 10 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்யும் போது என் அம்மா உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. என் அப்பாவின் இரண்டாவது மனைவி எந்த தேதியில் இருந்தார் என்றால் தேதி நினைவில்லை, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். நான் சின்னதாயி இறந்தபோது காரியத்திற்கு சென்று வந்தேனா என்றால் சென்று வந்தேன். எந் தந்தை முனியப்ப கவுண்டர் எந்த தேதியில் இறந்தார் தேதி, மாதம் நினைவில்லை 2006-ம் ஆண்டு கடைசியில் இறந்தார். என் தகப்பனார் முனியப்ப கவுண்டர் இறந்தபோது இரண்டாவது மனைவி சின்னதாயி (4ம் பிரதிவாதி) வீட்டில்தான் இறந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்து என் அப்பாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 30.07.1986-ல் பாகப்பிரிவினை செய்யும் போது என் தகப்பனார் பாகத்திற்கு வந்தது. 16.10.1985-ல் என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அவர் பெயருக்கு மட்டும் சுயமாக எத்தனை ஏக்கர் இருந்தது என்றால் 2 ஏக்கர் 4 செண்ட் இருந்தது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி என் தகப்பனார் பெயரில் மட்டும் 15 ஏக்கர் நிலம் இருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. என் அம்மா பெயரில் 16.10.1958-ல் 3 ஏக்கர் 25 செண்ட் நிலம் வாங்கி வைத்திருந்தார் என்றால் அவ்வாறு இல்லை உயில் எழுதி வைத்திருந்தார். அவ்வாறு உயில்

எழுதுவில்லை என்றாலும் வா.சா.ஆ.2 என் அம்மா பெயரில் வாங்கிய கிரைய பத்திரம் என்றால் சரியல்ல. சின்னதாயி பெயருக்கு 27.06.1959–ல் 2 ஏக்கர் 68 செண்ட் நிலம் வாங்கி வைத்துள்ளார் என்றால் சரிதான். மீண்டும் சின்னதாயி பெயருக்கு 30.06.1986 ல் தனியாக ஒரு இரண்டு ஏக்கர் நிலம் வாங்கி வைத்திருந்தார் என்றால் சரிதான். என் அம்மா பெயரில் இருந்த சொத்தையும், சின்னதாயி பெயரில் உள்ள சொத்தையும் அவரவர் தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை அனைவரும் பொதுவாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம். என் தாயார் பெயரில் உள்ள 3 ஏக்கர் 25 செண்ட் நிலத்திற்கு அவர் பெயரில் தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். சின்னதாயி பெயரில் உள்ள 4 ஏக்கர் 68 செண்ட்டிற்கு அவர் பெயரில் தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். 1986–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை வா.சா.ஆ.4 பத்திரத்தின் படி அ அட்டவணை சொத்துதான் இந்த வழக்கு சொத்து என்றால் சரிதான். ஆ அயிட்ட சொத்து எனக்கும் என் சகோதரருக்கும் பிரிந்த சொத்து என்றால் சரிதான். சி அயிட்ட சொத்து இந்த வழக்கின் 5 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.அ–4 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி ஆ அயிட்ட சொத்திற்கு நாங்கள் தனியாக பட்டா வாங்கிவிட்டோம் என்றால் சரிதான். சி அயிட்ட சொத்து ஒதுக்கப்பட்ட 5 ம் பிரதிவாதியும் அவர் பெயருக்கு தனியாக பட்டா வாங்கிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் கண்ட அ அயிட்ட சொத்திற்குண்டான பட்டா தனியாக என் அப்பா பெயருக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் கண்ட அ அயிட்ட சொத்தை என் அப்பா முனியகவுண்டரும், சின்னதாயிக்கும் ஜீவனம்சத்திற்கு 2 ஏக்கர் 3 செண்ட் நிலத்தை பயன்படுத்திக்கொண்டார்கள் என்றால் இல்லை என் அப்பா மட்டும் பயன்படுத்தி வந்தார். என் தகப்பனார் இறக்கும் போது அவருக்கு என்ன வயது என்றால் தெரியாது. என் அப்பா இறக்கும் வரை அவர் நன்றாக நடமாடிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான், அவர் வேலையை அவரே செய்து கொண்டார் என்றால் சரிதான். 19.12.2005–ல் என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றாலும் நான் சொல்வது போல் 2006 கடைசியில் இறந்துவிட்டதாக சொல்வது வழக்கு பற்றி எதுவுமே தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று சின்னதாயிடமோ, அவரது பெண் குழந்தைகளிடம் கேட்டேனா என்றால் இல்லை, 5 ம்

பிரதிவாதி சந்துருவிடம் கேட்டேன். எந்த தேதி, மாதம், வருடம் கேட்டேன் என்றால் நினைவில்லை, ஆனால் கேட்டேன். பாகம் பிரித்து தர பஞ்சாயத்து வைத்து கேட்டேனா என்றால் கேட்டேன். எந்த தேதி, வருடம் மாதத்தில் கேட்டேன் என்றால் தேதி, மாதம், வருடம் தெரியாது. தாவா சொத்தை பிரித்து தர 4, 5 பிரதிவாதிகளிடம் கேட்டதாக சொல்வது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பஞ்சாயத்து பேசியது சம்மந்தமாக யார் மூலமாக பேசப்பட்டது என்பதை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. முனியப்ப கவுண்டர் உயிருடன் இருக்கும் போதே 4, 5 பிரதிவாதிகளின் பெயரில் உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் எழுதி வைத்த விவரம் எவ்வாறு தெரியும் என்றால் பாகம் கேட்ட போது அவர் தரமறுத்து சட்டப்படி பார்த்து கொள் என்று கூறினார், வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரியும். முனிய கவுண்டர் உயிருடன் இருந்த காலத்திலேயே 15.07.1999ல் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தை 2வது மனைவி சின்னதாயின் பெயருக்கு அவர் உயிருடன் இருக்கும் காலம் வரை அவருக்கும், அவர் காலத்திற்கு பிறகு 5ம் பிரதிவாதிக்கு செல்லவேண்டும் என்று பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சின்னதம்பியின் மகன் குள்ளுசாமி எனக்கு உறவினர் என்றால் என் அப்பாவின் சம்மந்தி ஆவார். குள்ளுசாமியின் மகன் பெயர் ராமமூர்த்தி என்றால் சரிதான். மேற்படியார்கள் குள்ளுசாமி, ராமமூர்த்தி ஆகியோரை சாட்சிகளாக முன்வைத்துதான் 15.07.1999ல் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தை எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் சாசனத்தை நல்ல சிந்தனையுடனுடம், நல்ல உடல் நிலையிலும் தான் எழுதி வைத்தார் என்றாலும், அதை தெரிந்தே தற்போது தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குள்ளுசாமி இறந்துவிட்டார், ராமமூர்த்தி உயிருடன் உள்ளார். உயிலின் அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் 2005-ற்கு பிறகு முனியப்ப கவுண்டர் இறப்பிற்கு பிறகு 2009-ம் ஆண்டு 5ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. உயிலை வைத்து ஜலகண்டாபுரம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கடன் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்து குறித்து 1984 முதல்

2004 வரை வில்லங்கம் போட்டு பார்த்தேன், வில்லங்கம் எதுவும் இல்லை. அந்த வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். பட்டாவை ரத்து செய்யவேண்டும் என்று மனுக்கொடுத்தேனா என்றால் இல்லை. வருவாய் துறையினரிடம் நான் பட்டா ரத்து செய்வது சம்மந்தமாக எந்த புகாரும் கொடுக்காத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக எந்த பரிகாரத்தையும் இந்த வழக்கில் கோர முடியாது என்றால் சரியல்ல. சொத்து அப்பாவின் மூலம் வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் அனைத்து வாரிசுகளுக்கும் பாகம் உள்ளது என்றால் பெண்களுக்கு பாகம் இல்லை. எனது இறந்துபோன தங்கை பாக்கியத்தின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன், அவர்களுக்கு பாகம் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா இறந்த பின்பு சொத்தை மூன்றாக பிரித்து கொள்ளுமாறு சொன்னதாக கூறியுள்ளேன், அவ்வாறு எப்போது சொன்னார் என்ற விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் 1986–லேயே சொல்லிவிட்டார். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட அ அயிட்ட சொத்தை அவருடைய ஆண் வாரிசுகள் மட்டும் பிரித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். நான் கோரியிருக்கும் பாகத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 15.07.1999–ம் தேதியிட்ட உயில்சாசனத்தின் அடிப்படையில் 5ம் பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதால் தாவா சொத்து 5ம் பிரதிவாதிக்கு மட்டும் உரிமை உள்ளது என்றாலும் அதில் பாகம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 31.07.1986–ல் பாகம் பிரித்து கொண்டதில் இருந்து எங்களுக்கும், என் தகப்பனாருக்கும் எந்த பேச்சு வார்த்தையும் இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல, என் அப்பாவை இறந்த பிறகு என்னுடைய காட்டில்தான அடக்கம் செய்துள்ளேன். என் அப்பாவை என் காட்டில் அடக்கம்செய்துள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், என் அப்பாவின் காரியத்திற்கு கூட நான் வரவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரைக்கு மறுப்பு செய்து எங்கள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை.

<u>11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

11, 12 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால்

பட்டாவை ரத்து செய்துவிட்டு இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை என் பெயருக்கு தரவேண்டும் என்று கேட்டுள்ளேன். என்னுடைய வழக்குரையில் இறப்பு சான்றிதழ் தரவேண்டும் என்று கோரியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் 1ம் வாதி, என் சகோதரர் 2ம் வாதி ஆவார். தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்றாலும், 1986–ல் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றாலும் சரிதான். எங்கள் குடும்ப பிரச்சனைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்குள் உள்ள பிரச்சனை 11, 12 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகளிடம் முறையான ஆவணங்களை வழங்கும் பட்சத்தில் ஆவணங்களை சரிபார்த்து பட்டா வழங்குவார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. பட்டாவை எப்போது பிரதிவாதிகள் மாற்ற முயற்சி செய்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. எந்த தேதியில் பஞ்சாயத்து பேசினோம் என்றால் தேதி தெரியாது. பட்டா மாற்ற முயற்சி செய்தது சம்மந்தமாக மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். மனு தாக்கல் செய்யாமல் நேரடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எந்த தவறு ஏற்பட்டாலும் சட்டப்படி மனு கொடுக்கவேண்டும் என்றாலும் மனு கொடுக்காமல் 11, 12 பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து அலைக்கழித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். அரசாங்கத்தை தரப்பினராக சேர்ப்பதாக இருந்தார் முன்னறிவிப்பு கொடுக்கவேண்டும் என்றாலும், அவ்வாறு கொடுக்காத காரணத்தினால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 11, 12 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு அதிக பட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை.

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.